RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1955

OPEN ACCESS

# தனிப்பாடல்களில் காளமேகப் புலவரின் அறிவியல் சிந்தனைகள்

கா. வெண்ணிலா [அ, *], ந. சுபா [அ]

[அ] தமிழ்த்துறை, காவேரி மகளிர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620018, தமிழ்நாடு, இந்தியா

# The scientific Thoughts of Kalameka Pulavar in Solo Songs

K. Vennila [a, *], N. Subha [a]

[a] Department of Tamil, Cauvery College for Women, Tiruchirappalli-620018, Tamil Nadu, India

* Corresponding Author: srisivasakthimurugan1988@gmail.com

Received: 29-08-2022
Revised: 23-10-2022
Accepted: 01-11-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

It is the literature composed during the Sangam period that still stands as the lifeblood of Tamil literature. It would not be an exaggeration to say that they are the mother and forerunner of contemporary literature. Thus, the collection of solo songs has an important place in Tamil literature. It highlights the lives and ethics of the people. The songs of Kalameka Pulavar are praiseworthy. The contribution of science to today's medicine is immense. With the development of science, new drugs have been discovered in medicine and a permanent solution has been found for various terminal diseases. Nevertheless, today's scientific medicine has also endorsed the system of medicine found in the Sangam literature and has made its continuous use among the people. It is used in today's medicine as a natural medicine for various skin diseases. This is what Kalamekar, the scholar of the Sangam age, also teaches through his song. The purpose of this article is to highlight the scientific thoughts and medical references found in the poems of Kalameka Pulavar.

**Keywords:** Kalameka Pulavar, Solo Songs, Tamil literature

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களின் உயிர் நாடியாக இன்றளவும் வீற்றிருப்பது சங்க காலத்தில் இயற்றப்பட்ட இலக்கியங்களே ஆகும். அவ்விலக்கியங்களே இக்கால இலக்கியங்களுக்குத் தாயாகவும், முன்னோடியாகவும் விளங்குகிறது என்றால் அது மிகையல்ல. அவ்வகையில் தனிப்பாடல்கள் திரட்டிற்கு தமிழ் இலக்கியத்தில் முக்கிய இடமுண்டு. மக்களின் வாழ்வியலையும், நெறிகளையும் எடுத்தியம்புகிறது. அப்பாடலில் இடம் பெற்றுள்ள காளமேகப்புலவரின் பாடல்கள் போற்றுதற்குரியது. அறிவியல் சிந்தனைகளும், மருத்துவக் குறிப்புகளும் காளமேகப்புலவரின் பாடல்களில் காணப்படுவதை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இன்றைய மருத்துவத்தில் அறிவியலின் பங்களிப்பு அளப்பரியது. அறிவியலின் வளர்ச்சியினால் மருத்துவத்தில் புதிய புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு பல்வேறு தீரா நோய்களுக்கு நிரந்தர தீர்வு காணப்பட்டுள்ளது. இருந்த போதிலும் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள மருத்துவமுறையை இன்றைய அறிவியல் மருத்துவமும் வழிமொழிந்து மக்களிடையே தொடர் பயன்பாட்டில் இடம்பெறச் செய்துள்ளது. பல்வேறு தோல் நோய்களுக்கு மண் மருந்தாக இன்றைய மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. இதனையே சங்ககாலப் புலவரான காளமேகரும் தன்னுடைய பாடலின் வழி அறிவுறுத்துகின்றார்.

“மண்டலத்தில் நாளும் வயித்தியராய்த் தாமிருத்தும்

கண்டவினை தீர்த்தின்றார், கண்டீரோ - தொண்டர்

விருந்தைப் பார்த் துண்டருளும் வேளூர்என் னாதர்

மருந்தைப் பார்த் தால் சுத்த மண்".

இந்த உலகில் அனைத்து விதமான நோய்களுக்கும் சிவபெருமான் மருந்தளிப்பதாகவும் அது ஆன்மாவிற்கு ஆறுதல் அளிப்பதாகவும் கூறுகின்றார் (Puliyoork Kesikan, 2010). மேலும் சிவபெருமான் வீற்றிருக்கும் வைத்தீஸ்வரன் கோவில் மண்ணும் நோய்களுக்கு மருந்தாகும் என காளமேகப்புலவர் பாடுவதன் மூலம் மண் நோயிற்கு மருந்தாகும் என்கிற செய்தி மேற்கண்ட பாடலின் வழி அறியலாகிறது.

## தனிப்பாடல்கள்

தனிப்பாடல்கள் அனைத்தும் கற்றவர்களின் மனதை ஈர்க்கவல்லது, பல்வகைச் சுவைகள் நிரம்பியது. நாற்பொருள் பயன்களான அறம், பொருள், இன்பம், வீடு போன்றவற்றைத் தருவது. படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை விரும்பிப் படிக்கத் தூண்டுபவை இத்தகைய தனிப்பாடல்கள். கொடையாளிகளின் தன்மையை உள்ளபடியே உரைத்து இன்பம் தரும் நன்நெறியினை உடைய இப்பாடல்கள். இத்தகைய தனிப்பாடல்கள் படைக்கும் புலவர் பெருமக்கள் எண்ணில் அடங்கா. தனிப்பாடல் பாடும் புலவர் பெருமக்களின் மொழிநடையில் சிலேடையும், மொழி உணர்வும், வருணனையும் மிகச் சிறந்த இடத்தினைப் பெறும். தமிழ்மொழியில் தனிப்பாடல்களைப் பாடும் புலவர்கள் நிரம்பி இருந்தாலும் அப்புலவர் பெருமக்களில் தனக்கென தகுதியானதான இடத்தினைப் பெற்றிருப்பவர் காளமேகப் புலவர் ஆவார்.

## தனிப்பாடல் - விளக்கம்

தனிப்பாடல் என்பது பாடலின் கருத்து ஒரு பாடலோடு முற்றுப்பெற்றதாகவும், பாடல் நூலமைப்புக்கு ஏற்றவாறு இல்லாமலும் இருப்பது ஆகும். அதாவது ஒரு பாடல் எந்த நூல் அமைப்பிலும் இல்லாமல் தனித்து நின்று பொருள் முழுமைப்படத் தருவது தனிப்பாடல் எனப்படும்.

## தனிப்பாடல் தோற்றம் வளர்ச்சி

சங்க காலத்திற்கு முன்னும் சங்க காலத்திலும் புலவர்கள் தான் கருதிய ஒன்றைப் பற்றி எழுதிய பாடல்கள் தனியாகப் பல இருந்தமை, பின் நாளில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்று தொகுத்து முறைப்படுத்தி வெளியிட்டுள்ளதன் வழி சங்க காலத்திலேயே தனிப்பாடலின் தோற்றம் தொடங்கியது என்பது அறிய முடிகின்றது. தனிப்பாடலின் தோற்றம் பற்றி பல அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்துள்ளனர். தனிப்பாடல்கள் சிறப்புப் பெற்றிருந்த காலம் சங்ககாலம் ஆகும். இலக்கியம் படைத்த புலவர்களும், காப்பியம் படைத்த புலவர்களும் அவ்வப்போது தனிப்பாடல்களை பாடியுள்ளனர். ஆங்கில ஆசிரியர்களான மில்டன், சேக்ஸ்பியர் போன்றவர்களும் பல தனிப்பாடல்களை எழுதியிருக்கின்றனர். இதன் மூலம் அனைத்து மொழிகளிலும் தனிப்பாடல்கள் தனி இடம் பெற்றிருப்பதை அறியமுடிகிறது.

தமிழ் மொழியில் தனிப்பாடல்களின் தோற்றத்தினை பலவாறாகக் குறிப்பிடுவர். தனிப்பாடலின் தோற்றத்தை, "தெளிவு பொருந்திய தொடர்ச்சியான காவியப் படைப்புகளைச் செய்த பழம் பெரும் பாவலர்கள், அவை தவிர்த்துச் சம்பவ நிகழ்ச்சிகளுக்கும் சமய நோக்கங்களுக்கும் ஏற்ப எண்ணற்ற கவிதைகளைப் பொழிந்தனர். அவற்றுள் சில பேரழகு வாய்ந்த சிந்தனைப் பேழைகளாய் விளங்குவன" என்று நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்களும், "தமிழன்னையின் தலைசிறந்த மக்களாகிய புலவர் பெருமக்கள், செம்மை நலம் வாய்ந்த கவிதைகளால் சீரிய படைப்புகளை உருவாக்கினர். இலக்கிய அழகுச் செல்வமும், பேருலகனைத்தும் கவரும் பொது உணர்வும் கொண்ட அவை, உலகின் மற்றப் பகுதியினரிடையே பொறாமையையும், போட்டியையும் ஏற்படுத்தக் கூடியவை. ஆவை தவிரத் தகுதி

வாய்ந்த தனித்தனியான உதிரிப் பாடல்களையும் தம் கான்முளைகளுக்குப் பெரும் செல்வமாகப் புனைந்து தந்துவிட்டுச் சென்றனர்" 2 என நாராயண சாமி அவர்களும் "பெரிய நூல்களை இயற்றிய புலவர்கள் எத்தனையோ சந்தர்ப்பங்களில் தனிச் செய்யுட்களையும் பாடியிருப்பார்கள். தொகுக்கப்படாத காரணத்தால் அந்தச் செய்யுட்கள் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. அதிர்ஷ்டவசமாக ஒட்டக்கூத்தர், புகழேந்தி போன்ற பெரும் புலவர்கள் பாடிய சில பாடல்கள் கிடைத்திருக்கின்றன" என்று கு. அழகிரிசாமி அவர்களும், "பிற்காலப் புலவர்கள் நூல்கள் பல யாத்தாலும் தனித்தனியாகப் பாக்கள் பலவற்றையும் இயற்றினர். அவை அவர்களால் இயற்றப் பெற்ற நூலைவிடத் தனிச்சிறப்பு வாய்ந்தவை. ஏனென்றால் அவை அவர்களின் தனிப்பட்ட உள்ளப் போக்குகளை, விருப்பு வெறுப்புகளைத் தெளிவுப்படுத்துவன. கவிஞர்களின் உண்மையான உள்ளப்போக்கை அறிந்து கொள்வதென்பது எவ்வளவு சுவையானது" என்று புலவர் மாணிக்கம் அவர்களும் குறிப்பிடுகின்றனா.

காப்பியங்கள், பிரபந்தங்கள், இலக்கியங்களை இயற்றும் புலவாகளின் சொந்த விருப்பு வெறுப்புகள் மற்றும் வாழ்வியல் நிலைகள் காப்பியங்களிலோ, பிரபந்தங்களிலோ இடம்பெறுவதில்லை. அவை பெரும்பாலும் புலவர்கள் இயற்றும் தனிப்பாடல்களில் தான் வெளிப்படுகின்றன. தனிப்பாடல்களை இயற்றும் புலவர்களின் பாடல் இயற்றும் தன்மையே அதை சிறப்புடையதாக்குகின்றன. மேலும் மொழிப் புலமை பெற்ற ஒருவர் தொடக்கத்தில் தனிப்பாடல்களை எழுதிப் பழகிய பின்னரே நூல்கள், பேரிலக்கியம் முதலியன இயற்றிட தொடங்குவார். புலவர்களின் மொழிப்புலமை வளர்ச்சிக்கு அடித்தளமாகவும் தொடக்கமாகவும் தனிப்பாடல்கள் இருந்தன என்பதனையும் நடைமுறை வழி சிந்தித்திட வேண்டும்.

## காளமேகம்

19-ம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த புலவர் பெருமகனாருள் ஒருவர் காளமேகம் புலவராவார். இவரது இயற்பெயர் வரதன். கும்பகோணம் என்ற ஊருக்கு அருகாமையில் பிறந்தவர். திருவரங்கன் கோயில் மடப்பள்ளியில் பணிபுரிந்தார். வைணவ சமய தொடர்பு கொண்டு பின்பு சைவ சமயம் சார்ந்தவர்கள். பிறரை இகழ்தலால் "வசைகவி" என்றழைக்கப்பட்டார். இவர்தம் பாடல்களில் நகைச்சுவை உணர்வும், சிலேடை நயமும் மிகுதியாக இடம்பெறுதல் உண்டு.

இவர் பாடியவை திருவானைக்கா உலா, திருவானைக்கா சரசுவதி மாலை, சமுத்திரவிலாசம், சித்திரமடல் 187 தனிப் பாடல்களை இதுவரை இவர் பாடியுள்ளார் (Puliyoork Kesikan, 2010). வைணவ சமயத்தைச் சேர்ந்த இவர் சைவத்திற்கு மாறினார். திருவரங்கம் கோயிலில் பணிபுரிந்த இவர், திருவானைக்காவில் சிவாலயத் தொண்டு செய்யும் தாசியிடம் அன்பு வைத்திருந்தார். கோயிலின் உட்பிரகாரத்தில் தாசியின் வரவை எதிர்பார்த்து ஒரு நாள் இரவு காத்திருந்தார். சிறிது நேரத்தில் அவருக்கு தூக்கம் வர, அங்கேயே படுத்து உறங்கினார். பின் தாசி வந்து கோயிலில் இவரைத் தேடிப்பார்த்துக் காணாமையால் திரும்பச் சென்றாள். பின்னர் கோயிலும் திருக் காப்பிட்பட்டது. கோயிலின் உள்ளிருந்த புலவர் சரசுவதிதேவி அருளால் எல்லாக் கலைகளும் வரப்பெற்றார். பண்டிதனாகிச் சூல் கொண்ட காளமேகம் போலத் தமிழ் கவிமாரி பெய்தமையால் காளமேகம் என அழைக்கப்பட்டார்.

தனிப்பாடல் இயற்றுவதில் மிக்க பெருமைப் பெற்றவர் இவரே ஆவார். இவர் இயற்றியுள்ள தனிப்பாடல் புதிய உத்தி முறைகளைக் கொண்டனவாக உள்ளன. "தில்லையம்பூர்ச் சந்திர சேகரக் கவிராச பண்டிதர், காளமேகம் பாடல்களுக்காகவே தனிப்பாடல் தொகுத்தாரோ என்று எண்ண வேண்டியிருக்கிறது" எனவும் "புலவர் பெருமான் தமிழுலகமெங்கனும் பிரசித்தி அடைந்து புண்ணியத் தலங்கள் தோறும் சென்று தெய்வதரிசனஞ் செய்து பற்பல புதுமைக் கவிதைகள் பாடியுள்ளது பொனறாப் புகழ் படைத்ததாகும்" எனவும் கூறுவதன் வழி காளமேகப் புலவரின் சிறப்பை நம்மால் உறுதி செய்ய முடிகிறது.

## தமிழ் இலக்கியத்தில் காளமேகப் புலவர்

காப்பியங்கள் குறைவாக இருந்த காலத்திலும், பிரபந்தங்கள் அதிகமாயிருந்த காலத்திலும், தனிப்பாடல்கள் தனியிடத்தைப் பெற்று விளங்கியதற்கு காரணம் காளமேகப் புலவர் ஆவார். அருணகிரிநாதர் பெருங்காப்பியம் இயற்றாமல் சிறப்பு பெற்றது போல், இவரும் தனிப்பாடல்களாலும், சிறு நூல்களாலும் சிறப்பு பெற்றவராகத் திகழ்கிறார். "தனிப்பாடல்களில் சிறந்த இலக்கியச் சுவை கண்டு மகிழும் நிலையைத் தமிழ் வரலாற்றில் தோற்றுவித்தவை, சென்ற நூற்றாண்டில் இருந்த இரட்டையர் தனிப்பாடல்களும், இவர் செய்த தனிப்பாடல்களுமே. இப்பாடல்களின் பெருஞ்சிறப்பு இவை கல்வி பயிற்சி குறைந்தோர் நாவிலும் பயின்றன என்பதாகும்" என்று மு. அருணாசலம் குறிப்பிடுவதன் வழி காளமேகப் புலவரின் தனிப்பாடல்களின் சிறப்பினை எளிதாக அறிய முடிகிறது.

## மருத்துவச் சிந்தனை

"ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும்

மூடித் திறக்கின் முகங்காட்டும் - ஓடிமண்டை

பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்

உற்றிடுபாம் பௌ ளெனவே யோது"

செக்கில் கொட்டி செக்கினால் ஆட்டப்பட்டு அதன்கண் உள்ளதாகிய எண்ணெய் குடத்தில் வார்த்து மூடித்திறந்து பார்த்தால், பார்ப்பவரின் முகத்தைக் கண்ணாடியைப் போன்று காட்டும். எண்ணெய் ஒருவரது தலையில் ஊற்றித் தேய்க்கப்பட்டால் தலையில் ஓடிப் "பரபர" எனக் குளர்ச்சியைத் தரும் (Puliyoork Kesikan, 2014). அதனை ஆட்டி எண்ணெய் எடுத்தபின் பிண்ணாக்கும் பெறலாம்.

"பெரியவிட மேசேரும் பித்தர்முடி யேறும்

அரியுண்ணும் உப்பு மேலாடும் - எரிகுணமாம்

தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்

பாம்புமெலு மிச்சம் பழம்" (Puliyoork Kesikan, 2014)

கல்வி கேள்விகளினாலும், தனத்தாலும் சேருவதாகும். பித்து உடையவரின் தலையில் பித்தம் தெளிவதற்காகத் தேய்க்கப்படும். ஊறுகாய்க்காக அது துண்டுதுண்டாக நறுக்கப்படும். ஊறுகாய் போடும் போது, அதன்மேல் உப்புத்தூவப்படும். அதனது சாறு புண்ணில் பட்டால் எரிச்சல் தோன்றும். ஆதலால் பாம்பு, எலுமிச்சம் பழத்திற்கு ஒப்பாகும்.

## அறிவியல் சிந்தனை

"யாவருக்கும் ரஞ்சனைசெய் தியாவருக்கும் அவ்வவராய்ப்

பாவனையாய்த் தீதகலப் பார்த்தலால் - மேவும்

எதிரியைத்தன் னுள்ளாக்கி யேற்ற ரசத்தால்

சதிருறலா லாடியர சாம்" (Puliyoork Kesikan, 2010)

தன்னைக் கையிலே கொண்டு பார்ப்பவர்கள் எல்லாருக்கும் இன்பத்தை உண்டாக்கும். ஒவ்வொருவருக்கும் அவரவர்களினது தோற்றப் பொலிவைக் காட்டுகிறது. மங்கலப் பொருளாக விளங்குகிறது. தன்னிடம் எதிர்ப்பட்டவரைத் தன்னுள் அடக்கிக் காட்டுகிறது. அதன் பின்புறம் பாதரசம் பூசப்பட்டுள்ளது. சிறப்புடையது.

## வேதியியல் சிந்தனை

"இட்டுஇட்டு வாங்குதலால், இன்பவெள்ளை தோன்றுதலால்
மட்டுஇட்டு மூடி மறைத்தலால், - முட்டத்
தெருண்டோர்கள் போற்றும் திருமலைரா யன்சீர்க்
கரண்டகமும் பெண்குறியுங் காண்" (Puliyoork Kesikan, 2010)

சுண்ணாம்பு, வைக்கும் சிமிழில் அடிக்கடி சுண்ணாம்பை எடுத்துத் திரும்பவும் வைக்கப்படுகிறது. வெற்றிலைக்கு இனிய சுவையைத் தரும். வெண்மையான சுண்ணாம்பு உள்ளது. ஓரளவு சுண்ணாம்பு இட்டு அது மூடி வைக்கப்படுகிறது.

## எந்திர சிந்தனை

"ஆணி வரையுறலால் ஆனகுறிப் பேதரலால்
தோணக் கருமருந்தைத் தோய்த்திடலால் - நீணிலத்தில்
செப்பார்க் குதவாத் திருமலைரா யன்வரையில்
துப்பாக்கி யோலைச் சுருள்." (Puliyoork Kesikan, 2010)

ஆணியைத் தன் மேல் வைத்துக் கொண்டுள்ளது. சுடப்போகிறவன் வைத்த குறியினையே அடையாளமாக்குகின்றது. நிரம்ப அவ்வாயுதத்தின் பல்லில் வெடி மருந்து இடப்படுகின்றது.

## இயற்கை வேளாண்மை

"செய்யுட் கிடைமறிக்கும்: சேர்பலகை இட்டுமுட்டும்
ஐயமற மேற்றா ளடர்க்குமே - துய்யநிலை
தேடும் புகழ்சேர் திருமலைரா யன்வரையில்
ஆடுங் கதவுநிக ராம்" (Puliyoork Kesikan, 2010)

ஆடுகளின் புழுக்கைகள் காரணமாக எருவென்று மதித்து, அவைகளைத் திரட்டி வந்து வயல்களில் அங்குமிங்கும் போக விடாமல் தடுத்து மடக்கி நிறுத்தப்படுகிறது. ஆடுகளை ஒரு அறையில் விட்டால் அவை அரை நிமிடமும் சும்மாயிராமல் அறையின் கதவு பலகையினைத் தலையாலே முட்டிச் சத்தஞ் செய்து கொண்டிருப்பது இயல்பு.

## வானியல் சிந்தனை

"பகருங்கான் மேடமிட பம்மிதுன கர்க்க
டகஞ்சிங்கங் கன்னி துலாம்விர்ச் - சிகந்த
நுசுமகரங் கும்பமீ னம்பன்னி ரண்டும்
வசையறுமி ராசி வளம்." (Puliyoork Kesikan, 2010)

சொல்லும் போது முறையே மேட லக்கினமும், ரிசப லக்கினமும், மிதுன லக்கினமும், கடக லக்கினமும், சிம்ம லக்கினமும், கன்னியா லக்கினமும், துலா லக்கினமும், விருச்சிக லக்கினமும், தனுசு லக்கினமும், மகர லக்கினமும், கும்ப லக்கினமும் ஆகிய பன்னிரண்டு எனப் பெரியோர்களால் காரணப் பெயரிடப்பட்டதான குற்றமில்லாததான இராசிகளினது ஒவ்வொன்றும் கொடுக்கும் பலாபலத்தினது வளமைகளாகும்.

## முடிவுரை

காளமேகப்புலவரின் பாடல்கள் சிலேடையாக அமையப் பெற்றிருந்தாலும், சமூக வாழ்வியலையும், நெறிகளையும் எடுத்தியம்புவதாகவே உள்ளன. மக்களின் வாழ்வியலை கூறும் வழியிலேயே மருத்துவம், வானியல் வேதியியல் சார்ந்த செய்திகளும் காளமேகப் புலவரின் பாடல்களில் இடம் பெற்றிருப்பதை மேற்கண்ட கட்டுரையின் வழி அறிய முடிகின்றது.

## References

Puliyoork Kesikan, (2010) Kaalamega Pulavar Thani Paadalgal, Gowra Publications, Chennai, India

Puliyoork Kesikan, (2014) Kaalamega Pulavar Thani Paadalgal, Gowra Publications, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no cosnflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License